1986 நவம்பர் 19]

திரு த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தை தனி வட்டமாக அமைக்கும் செயற்குறிப்பு இல்லை என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் அந்தத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக இருந்த போதிலிருந்தே இந்தக் கோரிக்கையை நீண்ட நெடுங்காலமாக வலியுறுத்தி வந்திருக்கிறேன். அதோடு ஆலங்குடிக்கு எந்தப் பகுதியில் இருந்து வரவேண்டும் என்றாலும் 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு மக்கள் அங்கே தாலுக்கா அலுவலத்திற்கு வந்து காரியங்களைச் செய்கின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. ஆகவே, அரசு மறுபரிசீலனை செய்து இதைத் தனி வட்டமாக அறிவிக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கைகள் அந்தப் பகுதியில் இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினருக்கும் இருக்கலாம். நான் சொன்னது செயற்குறிப்பு இல்லை, நிலுவையில் இல்லை என்று சொன்னேன். அந்த செயற்குறிப்பு உருப்படியாக இருக்க வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற புள்ளிவிவரங்களை மற்றவைகளை வைத்து வருவாய் மற்றும் நிர்வாக துறைக்கு அனுப்புவார்களானால் அதற்குப் பிறகு அவர்கள் பரிந்துரையின் பேரில் அரசு ஆராயும் என்று குறிப்பிட்டேன்.

தஞ்சை மாவட்ட நிலங்களுக்கு நிலவரி ரத்து.

73—(*வினா எண் 8488) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1985-86-ல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி ரத்து செய்யப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டத்தில் 1395 ஆம் விளைச்சல் ஆண்டில் (1985-86) ஏற்பட்ட வெள்ளம் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர் நிலங்களில் விளைச்சல் 37 பைசா (50 விழுக்காடு-வுக்கும் குறைவாக உள்ள நிலங்களை வருவாய் அலுவலர்களால் நேரில் சென்று பார்வையிட்டபின்பு அந்நிலங்களுக்கு நிலவரி மற்றும் உள்ளூர் வரி வசூலை தள்ளுபடி செய்யுமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50 விழுக்காடு என்பது இரண்டு போகங்கள் நடுகின்ற நிலங்களில் ஒரு போகம் அறுவடை ஆகிவிட்டால், ஒரு போகம்

அறுவடை ஆன காரணத்தால், 50 சதவிகிதம் கணக்கில் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால், இரண்டு போகங்கள் சாகுபடி செய்கின்ற நிலங்களில் ஒரு போகம் சாகுபடி செய்து, அதிலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துத் தான் அடுத்த சாகுபடியைத் தொடங்க முடிகிறது. செலவும் சரியாக இருக்கிறது. எனவே, இரண்டு போகங்களிலும் விவசாயிகள் பலன் அடைந்தால்தான் முழுக்க 100 சதவிகிதம் கூட அல்ல, 50 சதவிகிதம்தான் கணக்கிடமுடியும். எனவே, ஒரு போகத்திலே விளைந்த நெல்லை கணக்கில் வைத்துக் கொண்டு, 50 சதவிகிதம் என்று சொல்லி, பல இடங்களில் வாய்தா தள்ளுபடி செய்யப்படவில்லை. எனவே அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்து, இரண்டு போகங்களும் வெற்றி பெற்றால்தான் 100 சதவிகிதமாக கருத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என முடிவு எடுக்க அரசு முன்வருமா என்றும், சென்ற ஆண்டு 12 தாலுக்காக்களில் குத்தகைப்பாக்கியைத் தள்ளுபடி.... (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக கேளுங்கள்.

திரு. மா. மணிமாறன் : 12 தாலுக்காக்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே குத்தகை பாக்கியை வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நாம் நிறைவேற்றியிருக்கிற இந்த நேரத்திலே இன்று வரை வாய்தா தள்ளுபடி செய்யப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு அதைப் பரிசீலிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி வஜா செய்வது, அதனைத் தள்ளி விடுவது என்பதற்கெல்லாம் வருவாய்த் துறையிலே ஒரு முறையும், வகையும் இருக்கிறது. அந்தத் தன்மையின் அடிப்படையிலேதான் அந்தப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆக, வெள்ளச் சேதத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட 12 வட்டங்களில் 2,36,437 ஏக்கர் பாதிக்கப்பட்ட அளவில் 51,72,317 ரூபாய் வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக மற்ற 10 வட்டங்கள் பாதிக்கப்பட்ட வகையில், 1,33,984 ஏக்கர் பாதிக்கப்பட்டது. அந்த வகையில் 29,73,405 ரூபாய் வரி தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த உத்தரவு சென்றடைந்ததா என்ற விவரங்கள் இல்லை. அடையாமல் இருந்தால், அது அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அது மட்டுமல்லாது, 1–7–1985 முதல் 30–6–1986 முடிய வெள்ளம், வறட்சியால் பாதிக்கப்பட்ட நிலங்கள் வருவாய்த் துறை ஆணை 14-இன் கீழ் உள்ளூர் வரி, உள்ளூர் செஸ் மேல் வரி, கூடுதல் தண்ணீர் வரி, கூடுதல் வரி சிறப்பு தண்ணீர் வரி போன்றவைகளை தள்ளுபடி செய்யும்படியும், அரசுக் கடன்களை வசூல் செய்வதை அடுத்த பசலி ஆண்டுக்குத் தள்ளிப் போடும்படியும், 19–9–1986 ஆம் நாளிட்ட ஆணையின் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

1986 நவம்பர் 19]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 வட்டங்களில் நாம் குத்தகை பாக்கி வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றியிருக்கிறோம். ஒட்டுமொத்தமாக ஒரு வட்டத்திலே குத்தகை பாக்கி வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால், ஒரு குறிப்பிட்ட ஏக்கரிலேதான் நிவாரணம் என்று சொன்னால், வருமானமே வராத விவசாயி, நில உடைமையாளர் எவ்வாறு வாய்தா கொடுக்கமுடியும்? நாம் குத்தகை வசூலிக்கக்கூடாது என்று சட்டம் நிறைவேற்றிய எந்தெந்த நிலங்கள் இருக்கின்றனவோ, அந்த நிலங்களுக் கெல்லாம் வாய்தா தள்ளுபடி செய்ய அரசு முன் வருமா என்று கேட்பதோடு, நம்முடைய பழைய ரெவினியூவிலே இருக்கின்ற வருமானங்களை 50 சதவிகிதம் கணக்கிடுவது—ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்தில் குறுவை நிலங்களே இல்லாமல், சம்பாவாக இருந்த காலங்களில் இருந்த கணக்கை இன்றைக்கும் தொடர்ந்து வெள்ளம் வருவதாக இருந்தாலும், தண்ணீர் பின்னாலே வந்தாலும் கூட, உணவுப் பற்றாக்குறையைப் போக்கு வதற்கு குறுவை நடவேண்டும் என்று நாம் அரசாங்கத்திலே தீவிரப் பிரச்சாரம் செய்து, விவசாயிகளை ஊக்குவிப்பு செய்ததற்குப் பின்னால்.......(மணியடிக்கப்பெற்றது) (பதில் இல்லை.)

அரசு அலுவலர்களை அதிகரித்தல்.

74—(*வினா எண் 9082) **திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) அரசு அலுவலகங்களில் பணியாளர்களை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், தமிழகத்தில் அதன் மூலம் பயனடைவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) விடையளிக்கும் நிலை எழவில்லை.

திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்ற போது, 'இல்லை' என்று சொன்னார்கள். 'இல்லை' எனில், படித்து விட்டு வேலையற்று இருப்பவர்களுக்கு வேலை தந்திட மாற்றுத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? உள்ளது எனில், அந்த விவரங்களைத் தெரிவிக்க முன் வருவார் களா என்று அறிய விரும்புகிறேன்.